**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 89** **நாள்: 24.07.2017**

## பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒருங்கிணைந்த குப்பை கையாளும் முறையினை அமலாக்குவதற்கான திட்டக்கூறு குறித்து பொதுமக்களுடன் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெற உள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்திலுள்ள குப்பைகளை பதனிடுதல், அறிவியல் ரீதியான சுகாதார குப்பை கொட்டுமிடம் அமைத்தல், அறிவியல் ரீதியான மறுசீரமைத்தல் ஆகிய பணிகளாகிய ஒருங்கிணைந்த குப்பை கையாளும் முறைமையை அமலாக்குவதற்கான திட்டக்கூறு தொடர்பான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற உள்ளது.

28.07.2017 அன்று காலை 11 மணியளவில் கொடுங்கையூரில் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை கொட்டும் 1 முதல் 8 வரையிலான மண்டலங்களுக்கு ஏ.என்.இராமசுவாமி நாடார் திருமண மண்டபம், எண்.147/2, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் தலைமையிலும்,

மேலும், 28.07.2017 அன்று மாலை 3.00 மணியளவில் பெருங்குடியில் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை கொட்டும் 9 முதல் 15 வரையிலான மண்டலங்களுக்கு ஸ்ரீ சுமங்கலி திருமண மண்டபம், எண்.2, புழுதிவாக்கம் மெயின் ரோடு, புழுதிவாக்கத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் தலைமையிலும் நடைபெற உள்ளது.

பொதுமக்கள் அனைவரும் வருகை புரிந்து தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**